# அமெரிக்காவில் எடுக்கப்பட்ட அக்கினிஸ்தம்ப புகைப்படம் நமக்குத் தெரியும். அவைகள் சுவிட்சர்லாந்திலும் ஜெர்மனியிலும் கூட எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியுமா?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

59. அந்த அக்கினிஸ்தம்பமானது மாம்சமாகி நம் மத்தியில் வாசம் செய்தபோது, கவனியுங்கள். அவர் என்ன செய்தார் என்பதை, நாம் எப்படியாக அன்றொரு இரவில் கண்டுகொண்டோம்? அவர்கள் எவ்வாறு அவரை அறிந்து கொண்டார்கள், இருதயத்தின் சிந்தனைகளைப் பகுத்தறிந்ததின் மூலமாகத்தான். மோசே உரைத்திருந்த அந்த தீர்க்கதரிசி அவர் தான் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அவ்வாறு அவர் உரிமைகோரினார். அதுதான் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்; அந்தவிதமாகத்தான் அவர் இருந்தார். இப்பொழுது, அவர் அதற்கு மறுபடியும் திரும்பி வந்தார், நீங்கள் அதை அறிந்து கொண்டீர்களா? "ஓ, இல்லை, சகோதரன் பிரன்ஹாமே." ஓ, ஆமாம், அவரும் கூட அவ்வாறு செய்தார்.

அவர் இங்கே பூமியில் இருந்தபோது, அவர் சொன்னார்; அவர், "நான் தேவனிடத்திலிருந்து வருகிறேன், தேவனிடத்திற்குப் போகிறேன்" என்று

கூறினார். அது சரிதானா? அவர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, உன்னதத்திற்கு ஏறிச்சென்ற போது... ஆராதித்துக் கொண்டிருந்த ஜனங்களை சிறையில் அடைக்கும்படியாக, தர்சுபட்டணத்தானாகிய சவுல் ஒருநாள் தமஸ்குவுக்குப் போகும் தன்னுடைய பாதையில் இருந்தான். சடிதியாக ஒரு மகத்தான **ஒளியானது** அவனுக்கு முன்பாக திடீரென பளிச்சிடவே, அவன் தரையில் விழுந்தான். அந்த மகத்தான **வெளிச்சமானது** மிகவும் பிரகாசமாக இருந்தது, அது சவுலின் கண்களைத் தொல்லைப்படுத்தியது; அவன் கொஞ்ச காலமாக குருடாயிருந்தான். அவர், "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "ஆண்டவரே, நீர் யார்?" என்றான்.

அவர், "நான் இயேசு" என்றார். அவர் மறுபடியுமாக அந்த **அக்கினிஸ்தம்பத்திற்குத்** திரும்பிச் சென்று விட்டார்.

60. பெந்தெகோஸ்தே சபையே, அதைக் குறித்த புகைப்படம் சரியாக நம்மிடம் இருக்கிறது. அல்லேலூயா. இப்பொழுது, அது அதே

ஆவிதானா? அது அதே அக்கினிஸ்தம்பம் தானா? அமெரிக்க புலனாய்வு துறையின் (FBI)-ன் கைரேகை மற்றும் தஸ்தாவேஜ்-உடைய தலைவராகிய ஜார்ஜ் J. லேசி, நீங்கள்-அங்கே அவருடைய ஆதாரச் சான்று உள்ளது, அதன்மேல், "ஒளி லென்சில் பட்டது. அதைக் குறித்து எந்த மனோசாஸ்திரமும் கிடையாது, ஏனென்றால் புகைப்படக்கருவியின் இயந்திர கண்ணானது மனோசாஸ்திரத்தை படம்பிடிக்காது" என்று எழுதப்பட்டுள்ளது. அந்த லென்சில் பட்டது.

சரியாக இங்கே மேலே மற்றொரு இடத்தில் வேறொரு புகைப்படம் கிடைத்தது, அவைகள் சுவிட்சர்லாந்திலும் ஜெர்மனியிலும் கிடைத்தது. அவர்களுடைய புகைப்படக்கருவிகள் (pictures) **அதை** எடுக்குமா என்று அவர்கள் அறிய விரும்பினார்கள். அந்த பெரிய ஜெர்மானிய புகைப்படக்கருவிகள் வெளியே கொண்டு வரப்பட்டன. நான் அங்கே நின்றுகொண்டு, "நிச்சயமாகவே, தேவன் அதை அனுமதிப்பாரானால்" என்றேன். நான் அப்போது அங்கே வெளியே வந்து பேசிக் கொண்டிருந்தேன், நான், "இப்பொழுது, **அது** வருகிறது" என்றேன். இந்த ஜெர்மானியர் அங்கே நின்றுகொண்டு, அவருடைய புகைப்படக்கருவிகளை சுழற்றிவிட்டு,

அவைகளை எடுத்தார். அது எடுக்கப்பட்ட போது, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருவதை அது காண்பித்தது, **அது** - காண்பித்தது, தம்முடைய கழுத்துப் பட்டையை (collar) திருப்பியபடி அங்கேயிருந்த அந்த மனிதரைக் காண்பித்தது, நான் ஆவியானவராலே அவனிடம், "நீர் அங்கே ஒரு பாதிரியாரைப் போன்று நின்று கொண்டிருக்கிறீர், ஆனால் நீர் ஒரு பாதிரியார் அல்ல. நீர் ஒரு ஜெர்மானியரும் கூட இல்லை. நீர் ஒரு இத்தாலியராக இருக்கிறீர்; நீர் 20,000 கம்யூனிஸ்டுகளின் தலைவராக இருக்கிறீர். நீர் ஒரு கூட்டத்தாரோடு ஓடி வந்துவிட்டீர்; மேலே அந்த மலைகளில் உமக்கு ஒரு சிறிய அநாதை ஆசிரம இல்லம் உள்ளது. நீர் உம்முடைய காலை உணவை உட்கொள்ளவில்லை, ஏனென்றால் உமக்கு வயிற்று கோளாறு இருக்கிறது. அது **கர்த்தர் உரைக்கிறதாவது.** உம்முடைய காலை உணவைச் சாப்பிடும், இயேசு கிறிஸ்து உம்மைச் சுகப்படுத்துகிறார்" என்றேன். அவர் உட்கார்ந்து, தம்மால் கூடியமட்டும் வேகமாகச் சாப்பிடத் தொடங்கி, அழுது கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த அந்தப் புகைப்படத்தை அவர்கள் எடுத்தார்கள், **அது** ஏறிச்சென்ற போதும், **அது** அபிஷேகித்துக்

கொண்டிருந்த போதும், **அது** அங்கிருந்து போன போதும், அவர்கள் புகைப்படம் எடுத்தார்கள், சரியாக பகல் வெளிச்சத்தில் அங்கே நின்று கொண்டிருந்த போது. அது என்னவாக இருக்கிறது, மனோசாஸ்திரம் அல்ல. என்னுடைய சகோதரனே, நீ தேவனிடமிருந்து மிக மிக தூரமாகப் போய் விட்டாயா? மனோசாஸ்திரம் அல்ல, அந்தப் புகைப்படக்கருவிக்கு உங்களுக்கு தெரிவதைக் காட்டிலும் அதிகம் தெரிந்திருக்கிறது.

61. இப்பொழுது, அது பரிசுத்த ஆவி தானா? நல்லது, அது இயேசு கிறிஸ்து செய்த கிரியைகளை செய்யுமானால், அது அவரின் மேலிருந்த அதே பரிசுத்த ஆவி தான். அப்படியானால், தேவனிடத்தில் விசுவாசம் கொண்டு, அது அதே பரிசுத்த ஆவி தான் என்று பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பதாக விசுவாசிக்கும் நீங்கள், உங்களால் ஐயத்துக்கு இடமின்றி முழுமனதோடு உறுதிப்பாடு கொண்டிருக்க முடியும், ஏனென்றால் **அது** உண்மையான தேவ குமாரன் மேல் இருந்தபோது, அது செய்த அதே காரியங்களைத் தான் செய்து கொண்டிருக்கிறது. அது புத்திரசுவிகாரத்தை (உடைய) குமாரர்கள் மேலும் குமாரத்திகள் மேலும் வரும்போது, அது அங்கே செய்த அதே காரியத்தையே செய்கிறது.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)